## உண்மையில் நடந்தது என்ன?

# ‘மிசா’ அடக்குமுறை: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கைதும் சர்ச்சைகளும்!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் – தோழர் தியாகு – விடுதலை ராஜேந்திரன் விளக்கம்!

(நேற்றைய தொடர்ச்சி)

சென்னை, செப்.14-

**சன் நியூஸ் தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற சிறப்பு விவாத நிகழ்ச்சியின் விவரம் வருமாறு:**

ஒவ்வொரு செல்லையும் மூடிட்டு அவர்களை பூட்டி வைச்சுட்டு அடுத்த செல். இப்படி ஒன்பதுல இருந்து ஆறில் இருந்து, 10இல் இருந்து ஆரம்பிச்சு மூன்றாம் எண் அறைக்கு வருகிறார்கள். மூன்று எப்ப திறக்க போறாங்கன்னு இருக்கிறாங்க, அதுல மூணுல இருக்கிறது ஸ்டாலின், சிட்டிபாபு, வி.எஸ். கோவிந்தராஜன், நீலநாராயணன், ஆற்காடு வீராசாமி.

சிறையில் ஒவ்வொரு செல்லிலேயும் அடித்து முடித்து அவர்களை பூட்டி வைத்து விட்டு அடுத்த செல் என இப்படி 10 இல் இருந்து ஆரம்பித்து மூன்றாம் எண் அறைக்கு வருகிறார்கள். மூன்று எப்போது திறக்க போறாகிறார்கள் என்று இருக்கிறார்கள், அதில் 3 வந்து அறையில் இருப்பவர்கள் மு.க.ஸ்டாலின், சிட்டிபாபு, வி.எஸ். கோவிந்தராஜன், நீலநாராயணன், ஆற்காடு வீராசாமி ஆகியோர்.

சிட்டிபாபு என்ன செய்கிறார் என்றால், திறந்த உடனே முதல் ஆளாக அவர் வெளியில் போகிறார். முதல் ஆளாக சென்று அடிகளை வாங்கி கொள்ள முடியுமா என பார்க்கிறார். அந்த அடிகளை முழுவதும் அவர் வாங்கிக் கொண்டு, ஒரு சுவற்றிலே போய் கையை வைத்து சாய்ந்து நிற்கிறார். அடுத்தவர்களை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அடுத்து மு.க.ஸ்டாலின் அவர்கள் மேல் அடி விழ ஆரம்பிக்கிறது. அப்போது அந்த சுருளிராஜன் என்கிற அதிகாரி பூட்ஸ் காலால் ஸ்டாலின் முகத்தில் ஓங்கி மிதித்து விட்டான். அவருக்கு அந்தத் தாடை எலும்புகள் உடைந்தது. இப்போது விஜய் சைகையால் கேலி செய்ததும் அதைத்தான்.

அப்போது சிட்டிபாபு குறுக்கே விழுந்து தடுக்கிறார். அவர் மீது அந்த அடிகள் விழுந்தன. சிட்டிபாபு ஏற்கனவே நோயாளி. இதய நோய், சிறுநீர்ப் பிரச்சினை என்று எல்லா நோய்களும் அவர் உடம்பில்குடி இருக்கிறது. அந்த அடிதான் அவருக்கு இறுதியாக மரணத்தை நோக்கி அவரை தள்ளி விட்டது.

இது இரண்டாம் தேதி இரவு நடந்து முடிந்தது. அன்றைக் குத்தான் அந்த அடி கொடுமை எல்லாம் நடக்கிறது. மாறன் அதுவரைக்கும் உள்ளே வரவில்லை. அவர் டெல்லியில் இருக்கிறார். டெல்லியில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமறைவாக இருந்து கொண்டு, அவசர நிலைக்கு எதிராக இயக்கம் நடத்துகிறார், ஏன்னென்றால், பத்திரிகை தணிக்கை எப்படிப்பட்டதா இருக்கும் என்றால், சி.ஜி. கே. ரெட்டின்னு ‘தி இந்து’ பத்திரிகையில் ஒரு நிர்வாக பொறுப்பில் இருந்தவர், அவர் பெர்னாண்டஸ் நண்பர், இந்த அவசரநிலை எதிர்ப்பு இயக்கத்தில் அவர் இருக்கிறார். அவர்தான் மாறன் அவர்களை ஒரு இடத்துக்கு அழைத்துக் கொண்டு போறேன் என்று டெல்லிக்கு கூட்டிக் கொண்டு போகிறார். அங்கு ஒரு சாமியார் உட்கார்ந்திருப்பார். அந்த சாமியார்தான் ஜார்ஜ் பெர்னாண்டஸ். நாம் விடக்கூடாது. விடாமல் இயக்கம் நடத்தனும். தமிழ்நாட்டுக்கு நாங்கள் வருகிறோம். இயக்கம் நடத்தனும் என்று இவருக்கு அறிவுரை சொல்கிறார்கள். இவர் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, சென்னைக்கு வருகிறார்.

சென்னைக்கு வந்ததும் கலைஞரை பார்த்தவுடன், எல்லா வற்றையும் சொல்ல ஆரம்பிக்கிறார். அதற்கு முன்பே, இந்த கைதுக்கெல்லாம் முதல் நாளே சிட்டிபாபு போன்றவர்கள் எல்லாம், இதை சொல்கிறார்கள். நாம் வந்து அவசரநிலைக்கு எதிராக இயக்கம் நடத்தனும், பணிந்து விடக்கூடாது என்று சொல்கிறார்கள்.

கலைஞர் அவர்கள், எதுவாக இருந்தாலும் சட்டத்துக்கு உட்பட்டுதான். நாம் ஒரு ஜனநாயக இயக்கம். நம் கருத்தை மக்கள் இடம் கொண்டு போவோம். தேர்தலில்தான் நாம் போட்டிடுவோம். வேறு எதுவும் செய்ய முடியாது என்று கூறுகிறார்.

மாறனிடம் கலைஞர் அவர்கள் சொல்கிறார், இப்போது நீ நேராக ஜெயிலுக்கு போ, ஜெயிலில் இரு, அரசு விடுதலை செய்யும்போது செய்யட்டும். இல்லை நாம் அதற்கான முயற்சிகளை சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ நாம் வழக்கறிஞர்களை வைத்து நம்ம செய்வோம் என்று சொல்லிவிட்டு அதேபோல ஸ்டாலினை அனுப்பின மாதிரியே அவரே போன் செய்து காவல்துறை தலைமை அதிகாரிக்கு மாறன் வந்தாச்சு, வந்து கூட்டிட்டு போங்கள், அப்படித்தான் மாறனை அனுப்பி வைத்தார். அப்படி மாறன் அங்கு வருகின்ற காலத்துக்கு எல்லாம், சிறையில் அடிக்கிறது நின்று போனது. ஒரு நாள் அடிக்கிறார்கள், அதுக்குப் பிறகு அடி இல்லை, மற்ற கொடுமைகள் தொடர்கிறது. அப்போது மாறனுக்கு ஒரு நச்சு காய்ச்சல் வந்து அவரை கொண்டு போய் வெளி மருத்துவமனையில் வைக்கிறார்கள்.

மருத்துவமனையில் இருந்து சில நாள் கழித்து திரும்பி வருகிறார். வரும்போது அவருக்கு எதிர்பாராமல் இந்த முதுகுத் தண்டு டிஸ்க் சிலிப் ஆகி விடுகிறது. அதுக்காக சக்கர நாற்காலியில் இருக்கிறார். இவர் சக்கர நாற்காலியில் நகர்வதை பார்த்து என்ன சொன்னார்கள் என்றால், இவரை அடித்து முதுகு தண்டை உடைத்து விட்டார்கள், மாறனே என்னிடம் சொல்லி சிரிச்சார். என்னை அடிக்கவே இல்லை, கலைஞரே என்னை அடித்ததா சொல்றாரு. ஸ்டாலினும் என்னை அடித்ததா சொல்றாரு. ஆனால் நான் அடி வாங்கவில்லை. ஏன் என்றால் நான் லேட்டாக வந்தேன். முதலில் வந்திருந்தால் அடித்திருப்பார்கள்.

அதில் மாறன்தான் அங்கே இருந்து கொண்டு, அவர் சொன்ன ஒரே வார்த்தை, அதற்கு முன்னால் அங்கு இருக்கிறவர்கள், ஹரிபெட், சிவாஜி, திருவேங்கடம், சி.பி.எம். தோழர்கள் எல்லாம் இதை எதிர்த்து இயக்கம் நடத்தனும், இதை விட்டுவிடக் கூடாது என்று சொல்லி பேசுகிறார்கள். அவர்களுக்கு துணை நிற்கிறார் சிட்டிபாபு. மாறன் சொல்கிறார், இதை எதிர்த்து நாம் நிற்க தவறினோம் என்றால் உள்ளேயே நம்மை அழித்து விடுவார்கள். எனவே இதற்கு எதிராக என்னென்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்வோம் என்று கூறினார்.

**நெறியாளர்:** நெருக்கடி நிலைக்கு எதிராக ஒரு இயக்கம் நடத்து வதற்கே தயக்கம் இருந்தது, மற்றவர்களுக்கு.

**தோழர் தியாகு:** ஆமாம், என்ன தயக்கம் இருந்தது என்றால், என்னங்க அடிக்கிறான், முகத்துல குத்துறான், வேப்பெண்ணெய்யை சோத்துல கலந்து கொடுக்கிறான், சாதாரண அடக்குமுறையா அது? ஏன்னா நான் கூட என்னுடைய கட்டுரையிலே எழுதி இருக்கிறேன். சிறை கைதிகளின் மனித உரிமைக்கான போராட்டம் மிசா சிறையில் இருந்து தொடங்கப்படும் என்பது பெருமைக்குரிய செய்தி என எழுதியிருப்பேன்.

எனக்கு மாறன் மேல் பெரிய மதிப்பு. நான் அவரை பார்த்தேன், அவர் என்னிடம், இந்த விவரம் பூராவுமே சொன்னார். அவர் உறுதியாக நின்றார். உங்களுக்கு அதேபோல கே.எம். ஹரிபட், ஏற்கனவே இதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், நான்கு தொழிற் சங்க தலைவர்கள் மிசாவில் கைது செய்யப்பட்டபோது திருச்சி சிறையில் எங்களோடு இருந்தவர் அவர் ஹரிபட்.

இவர்கள் ஒரு மனு எழுதுகிறார்கள், ஐ.நா. மனித உரிமை பேரவைக்கே மனு எழுதுகிறார்கள், அந்த மனு எட்டு காப்பியில் ஒரு ஏழு காப்பி வெளியே போயிடுச்சு, ஒரு காப்பி மாட்டிக் கொண்டது. அதை அந்த சூப்பிரெண்டு தேடி எடுத்துவிடுகிறான். டேய் சிவாஜி, மேல வா என்று சொல்லி விட்டு போறான். ஹரிபெட் நானும் வரேன் என்று நேராக போய் சூப்பிரெண்ட்டிடம் நிக்கிறார்கள். நீங்கள் என்ன செய்தாலும் எங்களுக்கு கவலை கிடையாது. இது ஹரிபட்டிடம் சொன்னது.

**நெறியாளர்:** தர்மபுரியிலே, சி.பி.எம். அலுவலகத்தில் கடைசி நாட்களில் முழுநேர மாவட்டச் செயலாளராக அவர்தான் இருந்தார்.

**தோழர் தியாகு:** ஆமாம், ஹரிபட், குசேலர், வி.பி. சிந்தன், பி.ஆர். பரமேஸ்வரன் நாலு பேர் தான் முதலில் தொழிற்சங்க தலைவர்களாக கைதாகி சிறைக்கு போய் நான்கு சிறைகளில் அடைக்கப்பட்டார்கள்.

நீதிமன்றம் தலையிட்டுதான் அப்புறம் விடுதலை கிடைத்தது. அது மாதிரி, அந்தப் போராட்டத்தை அங்கேயே தொடங்கினார்கள். அதில் ரொம்ப முக்கியமானதை நான் அடுத்த கட்டத்தில் சொல்கிறேன்.

உள்துறை செயலாளராக இருந்த சுப்பிரமணி தான் இதில் பெரிய பங்கு ஆற்றியவர். அவர் மாறனுக்கு நண்பர் மட்டுமல்ல, ஒரு நீதி நியாய உணர்வு படைத்த ஒரு அதிகாரி. அவருடைய பங்கு என்பது முக்கியம்.

**விடுதலை இராஜேந்திரன்:** ஜெய்சங்கர் அவருடைய பாதர்!

**தோழர் தியாகு:** ஓ ஜெய்சங்கர் பாதர்தான் சுப்பிரமணியா,

**நெறியாளர்:** நாம் சிறை கொடுமை என்பது ஒரு பார்ட். இன்னொன்று சிறைக்கு போயிட்டு வந்தது

**தோழர் தியாகு:** ஒன்னே ஒன்னு சொல்லிவிடுகிறேன் சிறை கொடுமையில், அவர்களுடைய சாடிஸ்ட்டுக்கு ஒரு சான்று மட்டும் சொல்லிவிடுகிறேன். நிறைய சான்று இருக்கிறது, ஒன்று மட்டும் சொல்லி விடுகிறேன். சிட்டிபாபுவைப் பொறுத்தவரைக்கும், அடித்து காயங்கள் ஆறிக் கொண்டிருக்கிறது, ஒரு நாள் என்ன செய்கிறான், சிட்டிபாபுபையைத் திறந்து, அவருடைய சட்டை எல்லாம் இரத்தக் கைறையோட இருக்கு, போய் துவைச்சிட்டு வாடாங்கிறான். இவர் போய், தானே அந்த துணிகளை, ஏன்னா அந்தச் சான்றுகளை அழிக்கிறார்கள், இவர்களை அடித்ததுக்கான சான்றுகளை அழிக்கிறார்கள். அதனால் அந்த துணியைத் துவைக்க சொல்கிறார்கள், துவைக்கும் போது கறை போகவில்லை யென்றால், திரும்ப போய் துவைச்சிட்டு வாடா, கறை போகுற வரைக்கும் நீ துவைக்கணும் என்கிறார்கள்.

இது சிட்டிபாபுக்கு அவர்கள் கொடுக்கிற தண்டனை, அவர் சொல்கிறார், நான் 12 லட்சம் மக்களின் பிரதிநிதி, இப்போதும் அப்படித்தான் இருக்கிறேன், இந்திரா காந்திக்கு கடிதம் எழுதுகிறார் ஜெயில்லே இருந்து. 12 லட்சம் மக்களுடைய பிரதிநிதி, மேயராக இருந்தவன், நான் துணிகளை துவைக்கிறதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. ஆனால் எனக்கு நிகழ்ந்த கொடுமைகளுக்கான தடையங்களை நானே அழிக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டேன் என எழுதுகிறார். அந்த மாதிரி ஒரு சாடிசம், அங்கு நிகழ்ந்த கொடுமைகள்.

**நெறியாளர்:** சரி. காங்கிரஸ்க்கு எப்படி சாடிசம் இருந்தது? காங்கிரஸ் ஆட்சி காலத்தில், இந்திரா காந்தியை விமர்சித்தவர்களை எல்லாம் உடனே கைது செய்யப்பட்டார்கள், இந்திரா காந்திக்கு அரசியல் எதிர்ப்பாளர்கள், அந்த அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் ஆளானார்கள், அது சாடிசம் அப்படின்னு தோழர் தியாகு சொல்கிறார். இப்போது அதை பகடி செய்யக்கூடிய ஒரு கட்டத்துக்கு தமிழ்நாடு வந்திருக்கே.

**விடுதலை இராஜேந்திரன்:** இது வந்து என்ன வார்த்தை. புதுசா தான் அகராதில் தேடனும். ஏன்னா தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடக்கிற அத்தனை நிகழ்வுகளுக்கும், ஒரு புதிய அகராதிதான் ஒன்று உருவாக்க வேண்டும். ஏன் என்றால், ஏற்கனவே இருக்கின்ற சொற்றொடர், இதுக்கு வந்து எதுக்கும் பொருந்தி வரமாட்டேன்என்ற நிலையில் உள்ளது.

**நெறியாளர்:** இன்னும் கடினமான சொல்லை தேடுகிறீர்களா?

**விடுதலை இராஜேந்திரன்:** ஆமாம், இந்த கேள்விக்கு நான் என்ன பதில் சொல்வது. அதாவது ஒரு அடிப்படையும் இல்லாமல், ஒரு சிந்தனையும் இல்லாமல், பெண்கள் விஷயத்தில் தான் வந்து ஸ்டாலின் கைது செய்தார்கள் என்று ஒரு ஆளு ஒரு அமைச்சர் பேசுறார் என்றால், என்ன இது




வுக்கு அவர் பொறுப்புள்ள ஒரு அமைச்சர்.

**நெறியாளர்:** தடித்தனம்தான்!

**விடுதலை இராஜேந்திரன்:** தடித்தனமா? அது வந்து. என்ன சொல்வது?

**நெறியாளர்:** நம்ம சட்டமன்றத்தில் பேசினா, வெளியில் வழக்கு போட முடியாது. மான நஷ்டம் வழக்கு போட முடியாது, அவதூறு வழக்கு போட முடியாது, சட்டமன்றத்துக்குள்ள என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம் அது சபாநாயகர் தான் இறுதி முடிவு அது கொடுக்கற ஒரு இம்பினிட்டி இருக்கிறது இல்லையா?

**விடுதலை இராஜேந்திரன்:** ஆமாம், சபாநாயகர் என்ன சொல்கிறார் என்றால், முதலமைச்சர் ஆற்றிய உரை அப்படி என்று சொல்கிறார். அதுவே வந்து ரொம்ப தவறு. அது எப்படி முதலமைச்சர் உரை என்று சொல்ல முடியும். அது ஒரு மோசமான ஒரு அவதூறுதான். அந்த உரைக்குப் பின்னால் யாருமே வந்து பதில் சொல்வதற்கு அனுமதி இல்லை, அந்த உரைக்கு பின்னாடி யாருக்கும் பதில் சொல்றதுக்கு அனுமதி இல்லைன்னு சொல்லிட்டார். அதுக்குப் பிறகு இரண்டாவது நாள் சட்டசபையில் அவர் பேசும்போது, அனுமதி இல்லை, அனுமதி இல்லைன்னு சொன்னாரு, அப்புறம் முதலமைச்சர் வந்து அனுமதிங்க என சொன்னதுக்கு அப்புறம் அனுமதிக்கிறேன்னு சொன்னாரு.

**தோழர் தியாகு:** அவர் என்ன சொல்றாருன்னா? நீங்க சத்தம் போடாம உரையை கேட்டிருந்தா. நான் வாய்ப்பு கொடுத்திருப்பேன், அதுவே தவறு என்கிறார்.

**நெறியாளர்:** ஸ்பீக்கர் பார்த்து கொடுக்கின்ற சலுகை.

**விடுதலை இராஜேந்திரன்:** நீங்கள் நல்ல பிள்ளையா இருந்து கேட்டுட்டு இருந்தீர்கள் என்றால், நான் வெளியே அனுப்பாமல் இருந்திருப்பேன், அப்படியென்கிற மாதிரி ஒரு விஷயமா ஆகியிருக்கு. அவர் பேசுனதுதான் எல்லாருக்குமே கேக்குதே, மக்கள் பார்த்துட்டுதான் இருக்கார்கள். தொலைக்காட்சியில், சட்டசபையில் சத்தம் போடுறார்கள் என்பது தெரியாது யாருக்கும்.

அந்தப் பக்கம் கேமராவே போகல. இவரு பேசுறவரைக்கும் கேமரா முதலமைச்சர் பக்கம்தான் நிக்குது. அவர் பேச்சை எல்லோரும் கேட்டுட்டு இருக்காங்க. அவரு போடுகிற சத்தம் வந்து, எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் போடுகிற சத்தத்தை விட அதிகமா சத்தத்துல பேசிட்டு இருக்கிறாரு விஜய். இதுல வந்து ஒரு காட்டு கூச்சல் அது. ஒரு ஒலிபெருக்கின்னு ஒன்னு இருக்கா, எதுக்கு ஒலிபெருக்கின்னு ஒன்னு வச்சிருக்கிறாங்க, அப்படியிங்கிறதே தெரியாமல் மூச்சு முட்டிக்கிட்டு எந்த விதமான கேப் இல்லாம ஒரு கூச்சல். இந்த பேச்சுக்கள் எல்லாம் நீங்கள் கேட்டுக்கொண்டு இருந்தீங்கள் என்றால் அமைதியா, நான் உங்களை பேசுறதுக்கு அனுமதிச்சிருப்பேன், அப்படின்னு சொல்லி ஒரு பெரிய ஜோக்கை சொல்கிறார். வேறு எதுவுமே இருக்காது. நீங்க சாட்டையை திருப்பி திருப்பி சுழட்டி அடிச்சிட்டிட்டே இருப்பீர்கள் ஒருத்தன் மேலே, சுரணை இல்லாமல் ஒருத்தன் உட்கார்ந்துட்டு இருப்பானா? நீ எது வேணாலும் அடிப்பே. அத கையைக் கட்டிட்டு உட்காந்துட்டு இருப்பானா. நீ உட்காந்து கேட்டுக்கிட்டு இருந்தா நான் பேச அனுமதிச்சு இருப்பேன்னு ஒரு சபாநாயகர் சொல்கிறார் என்றால்…

**நெறியாளர்:** நடுநிலையானவரு, பெருந்தன்மையானவரு, அப்படி சொல்லிருக்கிறார்களே.

**விடுதலை இராஜேந்திரன்:** அப்படி ஒரு இமேஜ் இருந்தது, ஆனால் அந்த கடைசி நாளில், ஒரு கருப்பு புள்ளி, கடுமையான கருப்பு புள்ளி அவர் மேல விழுந்துவிட்டது, அதுக்கு மேலே சொல்ல முடியாது. ஏன்னென்றால் முதலமைச்சர் அப்பாயின்ட்மெண்ட் தானே அவரு. முதலமைச்சரை எதிர்த்துக்கொண்டு என்ன செய்ய முடியும். அப்புறம் சபாநாயகரை விட்டுட்டு வெளியே போக வேண்டிவரும். அதனால அவர் பொசிஷன்தான் பார்க்க வேண்டி இருக்கிறது, இருந்தாலும் கூட இந்த மாதிரி எல்லாம் சொல்லி இருக்க வேண்டியதில்லை சபாநாயகர்.

இந்த அவசர நிலை காலத்துல வந்து, கிட்டத்தட்ட 75 ஜீன் 26 முதல் ஜனவரி 31வரை கலைஞர் ஆட்சி இருக்கிறது. இப்ப இந்த பீரியட்டை கலைஞர் எப்படி கையாண்டார்? அப்படியென்பதை ஒரு முக்கியமான விஷயமா பார்க்கணும்.

**நெறியாளர்:** ஒரு பாயிண்ட் இருக்கு இல்லையா சார், நெருக்கடி நிலையை எதிர்க்காமல் இருந்தால் இந்திரா காந்தியோடு சமரசமாக போயிருந்தால், காமராஜர் இந்திரா காந்தியோடு முரண்பட்டுட்டாரு.

எதிர்க்காமல் போயிருந்தால், ஆட்சியும் காப்பாற்றப்பட்டிருக்கும், யாரும் கைதாகி இருக்கத் தேவையில்லை, அடக்கு முறையே இருந்திருக்காது, இந்திரா காந்தி கொண்டாடியிருப்பார்கள், அப்படி இருக்கும்போது, அந்த முடிவை கலைஞர் ஏன் தேர்ந்தெடுத்தார்?

**விடுதலை இராஜேந்திரன்:** அதுதான் அந்த இடத்துலதான் தி.மு.க. ஒரு கட்சிங்கிறது நிற்கிறது. அதற்கான ஒரு கொள்கை அடித்தளம் ஒன்று இருக்கிறது. அதற்கு ஒரு அடையாளம் இருக்கிறது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் ரெண்டா பிரிஞ்சது இல்லையா, ஒன்னு வந்து இந்திரா காங்கிரஸ் தலைமையில் இருந்துச்சு, இன்னொன்னு ஸ்தாபன காங்கிரஸ் தலைமையில் ரெண்டா பிரிஞ்ச காலத்தில், கலைஞர் வந்து 71 தேர்தலில் தமிழ்நாட்டில் வலிமையே இல்லாத, அந்த இந்திரா காங்கிரஸோடு கூட்டணி வச்சுதான் தேர்தலில் போட்டியிட்டார், தேர்தலில் சீட்டை கொடுத்தார், இன்னொரு செய்தியை நான் இதில் சொல்லணும் அதில் தமிழ்நாட்டில் இன்றைக்கு மரியாதைக்குரிய ப.சிதம்பரம் அவர்கள் தமிழ்நாட்டில் காமராஜர் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்று இருந்தப்போது, காமராஜருடைய எதிர்ப்பு அணியில் தான் ப.சிதம்பரமே இருந்தார். அவர் காமராஜரை ஆதரிக்கவில்லை. அப்போது அந்த அணியோடு இருந்த நட்போடு தான் இருந்தார். பாராளுமன்றத் தேர்தலை சந்திச்சாரு.

அப்படி சந்தித்துவிட்டு இருந்த நேரத்தில், இப்படி ஒரு அடக்கு முறை ஒன்று சர்வதேச, பல்வேறு சூழ்நிலையில் வருகிறபோது தான் ஏற்கனவே கூட்டணி வைத்திருந்த அந்த இந்திரா காங்கிரஸ் கூட்டணியை விட்டுட்டு, ஒரு கொள்கைக்காக இந்த அடக்கு முறையை சந்திக்கணும் என்ற ஒரு கருத்துக்கு ஒரு கொள்கைக்காகதான் வருகிறார் அவர்.

ஜனநாயக ரீதியான ஒரு கொள்கைக்காகத் தான் வருகிறார். அப்படி அந்த காலக்கட்டத்தில், தோழர் தியாகு சொன்ன மாதிரி குஜராத் ஒன்று, தமிழ்நாடு ஒன்று என்கிறபோது, தமிழ்நாடு மட்டும்தான் வந்து இந்த அவசர நிலை காலம்ங்கிறது என்னென்று தெரியாத ஒரு காலமா? அவசர நிலை காலம் இந்தியா முழுதும் இருந்த காலக்கட்டத்தில் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில், அதற்கான டெமாக்ரட்டிக் ஸ்பேஸை இங்கே முழுமையாக கொடுத்து வச்சிருந்தார். அவர் சொல்லும்போது இன்னொரு தகவல் ஒன்று இந்த கடைசி கூட்டத்தில் பேசிட்டு வந்து, இதுதான் நான் கடைசியாக முதலமைச்சராக பேசினது அப்படின்னு வந்து சொல்லிட்டு வரும்போது அவருடைய வரலாறு எழுதிருக்கிற ஏ.எஸ்.பன்னீர்செல்வம் இன்னொரு குறிப்பைச் சொல்கிறார், அந்த கலைஞர் வரலாற்றை எழுதும் போது. உடனே வந்து நம்மை நம்பி இங்கே அடைக்கலம் கொடுத்து இருக்கிறவர்கள் எல்லோருமே அவசரமா வந்து இங்கே இருந்து வெளியேறதுக்கு, பாதுகாப்புக்கான ஏற்பாடாக இங்கே இருந்து அனுப்புங்கள். இதுக்கு அவர்களுடைய பாதுகாப்பை தேடி போங்கன்னு சொல்லிடுறாரு.

**நெறியாளர்:** வெளி மாநிலத்தில் இருந்து வந்த தேசிய தலைவர்கள் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மாதிரி என்று சொல்லிவிடுகிறார்.

**விடுதலை இராஜேந்திரன் :** ஜார்ஜ் பெர்னாண்டஸ் போனதுக்கு அப்புறம்தான் மேற்கு வங்கத்தில் அடுத்து அங்கே போய் தான் கைது செய்கிறார்கள்.

ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவருக்கு பாதுகாப்பு, அதே மாதிரி இங்கே எமர்ஜென்சினுடைய கொடுமையை விளக்குகின்ற பிரசுரங்கள் எல்லாம் வந்து மக்களிடம் வந்து போகிறது. அந்த சிபிஎம் லீடருடைய ஒரு பேச்சு ஒன்று ஏ.கே. கோபாலனுடைய ஒரு பேச்சு எமர்ஜென்சிங்கிறது ஒரு சட்ட விரோதமானது, அது பிறப்பிக்கப்பட்ட முறை தவறு என்பதை, ரொம்ப ஸ்ட்ராங்கா, ஏன்னா அதற்கான மாற்றுக் கருத்துக்கள் வந்து இங்கே எந்த ஊடகத்துக்கும் கிடையாது.

ஏன் எமர்ஜென்சி கொண்டு வரப்பட்டது, அதன் அடக்கு முறை என்பதைப் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது. பத்திரிக்கை தணிக்கை கிடையாது அன்றைக்கு டெலிவிஷன் கிடையாது. ரேடியோ மட்டும் தான் இருந்துச்சு. வானொலி மட்டும் முழுக்க முழுக்க அவர்கள் சார்பு செய்திகள் மட்டும்தான் வரும்.

பத்திரிகைகளுக்கு தனிக்கை செய்திகளும் ஒரு சார்பு செய்திதான் வரும். அந்த மாதிரி இருக்கிற நேரத்தில், இந்த ஏ.கே. கோபாலின் ஒரு பேச்சு முக்கியமான ஒரு பேச்சு, அதை வந்து தமிழ்நாட்டில் பல லட்சக்கணக்கில் தட்டச்சு செய்து, தமிழ்நாடு முதல் எச்சரிக்கை விடப்பட்டது.

இந்த எமர்ஜென்சியினுடைய கொடுமை பற்றி விடப்பட்டது. இன்னொரு விஷயம் என்னென்றால் காமராஜருக்கும் காமராஜர் காங்கிரஸ் வந்து கலைஞர் ஆதரிக்கவில்லை., ஆனால் காமராஜர் இந்த எமர்ஜென்சியால் வந்து கடுமையாக பாதிக்கப்பட்டு எதிர்த்தார் .ரொம்ப வருந்தும் மனநிலையில் இருந்தார். கலைஞருக்கும் காமராஜருக்கும் இடையில் இந்த அடக்கு முறைக்கு எதிரான ஒரு நட்புங்கிறது ஒரு பெரிய உணர்வா பிரதிபலிக்க ஆரம்பிச்சது. அப்பதான் காமராஜர் காங்கிரஸை எதிர்த்து கொண்டு வந்த தொடர்ச்சியா எழுதி கொண்டுவந்த முரசொலி பத்திரிகையில் காமராஜர் வந்து எமர்ஜென்சி எதிர்த்து அடக்கு முறையை எதிர்த்து பேசிய பேச்சை எல்லாம் முரசொலி பத்திரிகையில் கலைஞர் வெளியிட ஆரம்பிச்சார். கலைஞர் பேச ஆரம்பிச்சு, அவரை கைது செய்யனும் அப்படி என்கிற ஒரு நிலைமை வரும் போது கூட, நான் காமராஜரை கைது செய்ய மாட்டேன் என்று அவர் உறுதியான ஒரு நிலைப்பாடு எடுத்தார்.

பத்திரிக்கை சென்சார் எல்லா இடத்திலும் நடந்துச்சு, ஆனா தி.மு.க. ஆட்சியில் பத்திரிக்கை சென்சார் அப்படிங்கிறது வந்து, நீங்கள் பத்திரிகை சென்சார் வைக்கணும் அப்படின்னு சென்ட்ரல் கவர்மெண்ட்டில் ஒரு உத்தரவு வந்தபோது, சென்சார் அதிகாரின்னு ஒரு பரஞ்ஜோதிங்கிற ஒரு அதிகாரியை பேருக்கு மட்டும் அதிகாரியாக வைச்சிருந்தார்களேத் தவிர, எந்தப் பத்திரிகைக்கும் இந்த சென்சாருக்கு யாரும் போறது கிடையாது. எந்த பத்திரிக்கையும் ஒரு சென்சார் செய்யறதும் கிடையாது. நாங்கள் ஒரு அதிகாரின்னு வச்சிருந்தோம் என்பதோடு நிறுத்தியிருந்தது.

**நெறியாளர்:** ஆட்சி கலைக்கப்படுகிற வரையிலும்

**விடுதலை இராஜேந்திரன்:** அந்த பீரியட் தான், அந்தப் பீரியட்டை தான் நான் முழுமையாக பத்திரிகை எந்த தடையும் இல்லாமல் எழுதப்பட்டது.

தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த அவரநிலை கொடுமையை பற்றி விரிவாக எழுதக்கூடிய ஒரு கருத்து சுதந்திரத்தை இந்த அவசரநிலை அடக்கு முறைக்கு கீழே தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி அந்த உரிமைகளை வந்து எப்படி கலைஞர் வழங்கினார். அப்படியென்கிற விஷயத்தை நான் சொல்ல வருகிறேன். அதே மாதிரிதான் இந்தக் கருத்து உரிமை, ஒரு கட்டத்துக்கு மேலே வந்தப்போது காமராஜருடைய மரணம் அப்போதுதான் நடக்கிறது. அப்புறம் அவருக்கு வந்து எந்த மண்டபத்தில் அமைக்கிறது போன்ற அந்த முயற்சிகள் எல்லாமே செய்தது.

**நெறியாளர்:** ரெண்டு விஷயம். ஒன்று தோழர் தியாகு கிட்டே கேட்கிறது. பொலிட்டிக்கல் டிடென்யூ, ஒரு அரசியல் கைதி, மிசாவில் சிட்டிபாபு எம்.பி. இருந்தவரு, ஆற்காடு வீராசாமி அமைச்சராக இருந்தவர், எம்.பி., எம்.எல்.ஏ.வாக இருந்தவர். அரசியல் தலைவர்கள் சி.பி.எம். யைச் சேர்ந்தவர்கள், கைது செய்யப்படுகிறார்கள். தி.மு.க.வை சேர்ந்தவங்கள் கைது செய்யப்படுறார்கள், நக்சல் இயக்கங்களை சேர்ந்தவங்களுக்கு அந்தப் பிரச்சினை வருகிறது, ஆர்.எஸ்.எஸ். சைச் சேர்ந்தவர்கள், பி.ஜே.பி.யை சேர்ந்த மூத்த தலைவர்களே அந்த அடக்கு முறைக்கு ஆளானார்கள், இன்றைக்கும் அவர்கள் நெருக்கடி நிலையை ஒரு கருப்பு நாள், அப்படின்னுதான் அத்வானி திரும்ப திரும்ப சொல்லிட்டே இருக்கிறார். இப்போது ஒரு முக்கியமான கேள்வி ஸ்டாலின் அவர்களைப் பற்றிய ஒரு அவதூறு அல்லது இந்த கருத்து சொல்லும்போது, அவர் அரசியல் கைதி அல்ல, ஒரு பொலிட்டிகல் டிட்டனி அல்ல அப்படின்னு சொல்றாங்களே?

**தோழர் தியாகு:** இதை சொல்லி இருக்கிறவர், சட்டத்துறை நீதித்துறைக்கு அமைச்சராக இருப்பவர் , அவருக்கு சட்டம் பற்றி, நீதி பற்றி தெரிஞ்சிருக்கணும் இல்லையா? இதை நான் வாதமே கேட்கிறேன். அவர் பதில் சொல்லட்டும். நான் என்ன கேட்கிறேன்னா, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, ஸ்டாலினை கொண்டு வந்து எந்த கொட்டடியில் அடைக்கிறாங்க, மிசா பிளாக்லே அடைக்கிறாங்க.

ஜெயில்ல வந்து செக்ரிகேஷன் ரொம்ப முக்கியம். விசாரணை கைதிகள் தனியா இருப்பாங்க. தண்டனை கைதிகள், நீண்ட தண்டனை கைதிகள், குறைந்த தண்டனை கைதிகள், கடுங்காவல், வெறுங்காவல் இப்படி எல்லாம் பிரித்து வச்சிருப்பாங்க. இப்படி நக்சலைட்டா இருக்கறவங்க, அரசியல் கைதிகள் என்று பிரித்து வச்சிருப்பார்கள்.

மிசா கைதிகள் தனி பிளாக், அதில் வேற யாரையும் அவங்களோட சேர்த்து போட முடியாது. அங்கே வேலைக்கு போறவர்கள் மற்றவர்கள் காவலர்களை தவிர ஒரு மிசா கைதியும் அரசியல் கைதியும் வேறு ஒரு சாதாரண கைதியையும் ஒரு கொட்டடிக்குள்ளயே அடைத்து வைக்க முடியாது. ஒரு பிளாக்கில் வைக்க முடியாது. ஒன்பதாம் பிளாக் என்ன பிளாக்? அது மிசா பிளாக். எல்லாரும் எழுதிட்டாங்க. எல்லாத்துலேயும் வந்துருக்கு இந்தச் செய்தி.

இஸ்மாயில் ஆணைய அறிக்கை மிக தெளிவான சான்று. இந்த அறிக்கையில் இருக்கிறபடி மூணாவது ரூம்மில் மூணாவது அறையில் கொட்டடியில் சிட்டிபாபு என்ற மிசா கைதியோடும் வி.எஸ். கோவிந்தராஜன் என்ற மிசா கைதிகளோடும் நீலநாராயணன், ஆற்காடு வீராசாமி என்ற மிசா கைதிகளோடும் மு.க.ஸ்டாலின் அடைக்கப்பட்டது மிசா சட்டத்திலேயா அல்லது வேறு வழக்கிலேயா?

இப்ப நீங்க சொல்றீங்க, அவர் வேறு வழக்குல போனாரு, வேறு குற்றத்துக்காக போனார். அந்த குற்றத்துக்காக ஒருத்தரை ஜெயில்ல அனுப்புறது எப்படி அனுப்ப முடியும்? எவ்வளவு மோசமான சர்வாதிகார ஆட்சியிலேயும் ஒரு போலீஸ் அதிகாரி, ஒருத்தரை கொண்டு போய் இவரை ஜெயிலில் போட்டு வைங்கன்னு அனுப்ப முடியாது. நீங்கள் என்ன செய்யனும் ரிமாண்ட் ஆர்டர், காவல் ஆணை வாங்கனும், முதல் தகவல் அறிக்கை தாக்கல் பண்ணனும். குற்றப்பத்திரிகை கொடுக்கணும். அவர் ரிமாண்ட் செய்த பிறகுதான், நீங்க என்ன செய்ய வேண்டும் என்றால் ஜெயில்லே கொண்டு போய் ஒப்படைக்க முடியும். எந்த கோர்ட்டு, எந்த குற்றத்துக்காக அவரை ரிமாண்ட் செய்தீர்கள் என்பதை நீங்கள்தான் அரசாங்கத்தில் இருக்கறீர்கள், அன்றைக்கு டிஜிட்டல் ரெக்கார்டிங் கிடையாது. ஆனால் எழுதி வச்சிருக்கிறார்கள். ஹாட் காப்பீஸ் இருக்கு. எடுத்து கொடுங்கள் டிட்டென்ஸ் காட்டி இருக்கிறார்கள் இல்லையா நீங்கள் எடுத்து கொடுங்கள், ரிமாண்ட் ஆர்டர் எந்த மேஜிஸ்ட்ரேட் போட்டார், எப்படி போட்டார் அது என்ன குற்றம், அவர் மேல என்ன செக்சன் என்ன பிரிவின்படி குற்றம் ஐ.பி.சி.இல என்ன பிரிவின்படி அவர் குற்றம் செய்தார். சரி, அது அப்புறம் என்ன ஆச்சு? அதுக்கு பிறகு திரும்ப கோர்ட்டில் போய் ரிமாண்ட் ஆர்டர் எக்ஸ்டென்ட் பண்ணாங்களா? அவரை கஸ்டடியில் எடுத்து விசாரிச்சாங்களா? எதுவுமே இல்லாமல் நீங்கள் கற்பனையாக இது வேறு குற்றத்துக்கு போனாரு, மிசா காலத்தில் சிறைக்கு போனார்.

ஆனால் மிசாவில் சிறைக்கு போகவில்லை, சான்று கொடுக்கணும் இல்லையா. நீங்கள் சட்டத்துறை அமைச்சர் உங்களுக்கு இந்த சட்டம் எல்லாம் தெரிஞ்சிருக்கணுமே, அப்படி இல்லைன்னு சொன்னா இது முற்றிலும் அவதூறுதான். இதுக்கு வேறு என்ன பேர் சொல்ல முடியும்?

(தொடர்ச்சி நாளை)